# வாணி விழா 2015



## இந்து மன்றம்
## புனித சில்வெஸ்டர் கல்லூரி
## கண்டி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை யென்பிழையைப் பொறுப்பானை பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி ஆருரானை மறக்கலுமாமோ

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியு முடலு முடமை
யெல்லாமுங் குன்றே யனையாய்
எனையாட் கொண்ட போதே
கொண்டிலையோ இன்றோர் இடையூறெ
னக்குண்டோ எண்டோள்
முக்கண் ணெம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான்
இத்தெருவே ஐயா நீ உலாப்போந்த
அன்று முதல் இன்றுவரை கையாரத் தொழுது
அருவி கண்ணார சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய (திரை) சுந்தரனே

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
யேத்தொலி யெங்குங் குழாம் பெருகி
விழலொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகு திருவாஷரூரில்
மழ விடையாற்கு வழிவழியாளாய்
மணஞ் செய் குடிபிறந்த
பழவடி யாரொடுங் கூடி யெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அதிருங் கழல் பணிந்து அடியேனுன்
அபயம் புகுவதென்று நிலை காண
இதயந் தனிலிருந்து க்ருபையாகி
இடர் சங்கைகள் கலங்க அருள்வாயே
எதிரங் கொருவரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கிலுமை பாலா
பதியெங் கிலுமிருந்து விளையாடிப்

## பெரிய புராணம்

நின்றாலு மிருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடு மலர்பாத மொருகாலு மறவாமைக்
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்
பலகுன்றிலு மமர்ந்த பெருமாளே

## சகல கலா வல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே !

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைப்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்த்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கலோ
உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே !

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணை கடலே
சகல கலாவல்லியே !

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததேன்னே?
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகவும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே !

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி நல்காய்
எழுதா மறையும்
விண்ணும் புவியுற் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்
உளங்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே !

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே !

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே !

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி வழிபாடு

ஒவ்வொராண்டும் புரட்டாதி மாதம் வருகின்ற பூர்வபட்ஷபிரதமை முதல் நவமி ஈராக உள்ள ஒன்பது தினங்கள் நவராத்திரி தினங்களாகும். நவராத்திரி நாட்களான ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் கிரியா சக்தியான அன்னை துர்க்கையையும் அடுத்த மூன்று நாட்கள் இச்சா சக்தியான் திருமகளையும் இறுதி மூன்று நாட்கள் ஞான சக்தியான கலைமகளையும் வேண்டி வழிபட வேண்டும் என் சாஸ்த்திரங்கள் சொல்கின்றன.

உலகின் முக்கிய தேவையான ஞானம், செல்வம், வீரம் இவை மூன்றும் பெற்று சிறந்திட முப்பெருந் தேவியரையும் மும்மூன்று நாட்கள் முறைப்படுத்தி வேண்டி வழிப்பட்டாலும் மூன்று சக்தியரும் ஒன்றான ஆதி சக்தியே என கருதி சக்தியின் ஒன்பது ஷரூபங்களையும் ஒன்பது நாட்களிலும் வழிபடுவது இன்னும் சிறப்பாகும்.

முதல் அம்பிகையை குமாரி வடிவமாக அலங்கரித்து மல்லிகை மலர்ச்சூடி வெண்பொங்கல் படைத்து வணங்குதல் வேண்டும்.

இரண்டாம் நாளில் இராஜ இராஜேஷ்வரியான அம்மனை வழிபட வேண்டும். மல்லிகை துளசி சாற்றி புளியோதரை படைத்து அம்மனை வழிபடலாம்.

மூன்றாம் நாள் அம்மிகையை கல்யாணியாக வழிபட வேண்டும். சம்பங்கி, மரிக்கொழுந்து போன்றவற்றால் அன்னையை அலங்கரித்து சர்க்கரை பொங்கல் நிவேதனம் செய்யலாம்.

ரோகினி தேவியாக அம்மனை வழிபடும் நாள் நான்காம் நாளாகும். ஜாதி மல்லி பூச்சூடி கதம்ப சாதம் படைத்து வழிபடலாம்

ஐந்தாம் நாளன்று காளிகா தேவியாய்ப் பாவித்து அம்மனுக்கு பாரிஜாத மலர் சூடி, தயிர்ச்சாதம் படைத்து வழிபட வேண்டும்.

ஆறாம் நாளில் சண்டிகா தேவியாய் தேவியை வழிபட வேண்டும். இந் நாளில் செம்பரத்தி பூவோடு தேங்காய்ச்சாதம் படைத்து அம்மன் அருள் பெறலாம்.

ஏழாம் நாளில் தேவிக்கு தாழம்பூ மாலை போட்டு எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து அன்னப்பூரணியாய் வழிபடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் நாள் அஷ்ட தேவிகளுடன் எழுந்தருளும் துர்க்கையாய் அம்மனை போற்ற வேண்டும். ரோஜா பூ சாற்றி பாயாசம் படைத்து வழிபட வேண்டும்.

ஒன்பதாம் நாள் காமேசுவரி எனும் சிவ சக்தி கோலத்தில் அம்மனை சுபத்திரா தேவியாக பாவித்து செந்தாமரை மலரால் அரிச்சித்து திரட்டுப் பால் நிவேதம் செய்து பூஜிக்க வேண்டும்.

### கொலு வைத்தல்

கொலு என்பது நவராத்திரி நாட்களின் சிறப்பம்சமாகும். பஞ்சபூதங்களில் ஒன்றான மண்ணினால் சிலை செய்து அதில் அம்மனை எழுந்தருளச் செய்து வழிப்பட்டால் அன்னையின் அருள் பரிபூரணமாக கிடைக்கும். என தேவி புராணம் கூறுகிறது. மார்கண்டேய புராணத்தில் மகாராஜா சுரதா என்பவன் தன் குருவியின் ஆலோசனைப்படி காளி ஷருபத்தை மண்ணில் செய்து வழிபட்டு அருள் பெற்றதாக கூறப்பட்டுள்ளது.

இதனை உணர்த்தும் விதமாகவே கொலு காட்சியில் அனைத்தும் அம்மன் பொம்மைகளையும் முறைப்படி அடுக்கி வைத்து பூஜிக்கிறோம். கொலு வைப்பவர்கள் புரட்டாசியில் வரும் அமாவாசை நாளில் கொலு வைக்கும் முன்பு வீட்டை சுத்தமாக்கி, அழகிய கோலங்கள் போட வேண்டும். பின் மேடை அமைத்து பொம்மைகளை வரிசைப்படுத்த வேண்டும். 5 , 7 , 9 , படிகள் அமைத்து கொலு வைக்கலாம்.

முதல் படியில் புல், செடி, கொடி ஆகிய தாவர பொம்மைகளை வைக்கலாம். 2ம் படியில் நத்தை போன்ற பொம்மை வைத்து நலம் பயக்கும். நத்தை போல மெதுவாக நிதானமாகச் சென்று உயர் இடத்தைப் பிடிக்க வேண்டும் என்று உறுதி கொள்வதே இதன் பொருள்.

மூன்றாம் படியில் எறும்பு, கறையான் புற்று பொம்மைகளை வைக்கவேண்டும். எறும்பை போல சுறுசுறுப்பு, எத்தனை முறை தகர்த்தாலும் கறையான் திரும்ப திரும்ப புற்றை கட்டுவது போன்ற திட மனப்பாங்கை வேண்டி பொம்மைகளை அடுக்க வேண்டும்.

நான்காம் படியில் நண்டு, வண்டு பொம்மைகளே இடம்பெறவேண்டும். இவற்றின் குணம் ஆழமாகி ஊடுருவி பார்ப்பது. எந்த விஷத்தையும் ஆழமாகச் சிந்தித்து செயலாற்றுவதை இந்த பொம்மைகள் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் படியில் மிருகங்கள், பறவைகள் பொம்மைகள் வைக்க வேண்டும். மிருக குணத்தை விட வேண்டும். பறவை போல கூடி வாழ வேண்டும் என்பதே இதன் பொருள்.

ஆறாம் படியில் மனித பொம்மைகள் வைக்க வேண்டும். வாழ்கையில் மேற்கண்ட ஐந்து படிகளில் உள்ளது போன்ற குணங்களை கடைப்பிடித்தால் முழு மனிதன் என்ற அந்தஸ்த்தை பெறலாம்.

ஏழாம் படியில் முனிவர்கள், மகான்கள் பொம்மைகளை வைக்க வேண்டும். மனிதன் உரிய பக்தி மார்க்கத்தை கடைப்பிடித்தால் மகான்கள் ஆகலாம் என்பதே இதன் பொருள்.

எட்டாம் படியில் தெய்வங்களுக்கு கீழ் ஸ்தானத்தில் இருக்கும் தேவர்கள், நாயன்மார்கள், ஆள்வார்கள் நவக்கிரகங்களின் பொம்மைகளை வைக்க வேண்டும். முனிவர் மகான் நிலையை அடையும் மனிதன் தெய்வ நிலைக்கு உயர்வதை இது காட்டுகிறது.

ஒன்பதாம் படியில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் தங்கள் தேவியரான சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதியுடன் இருக்க வேண்டும். ஆதி பராசக்தி சிலையை நடுவில் பெரிய அளவில் வைக்க வேண்டும். உயிர்கள் தங்கள் நிலையை கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தி தெய்வமாக வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துவதோடு முதல் படியில் தாவரங்களையும் அடுத்தடுத்த படிகளில் சிற்றுயிர்கள் மனித பொம்மைகள் இறுதியில் தெய்வ பொம்மைகள் என அமையும் கொலுக்காட்சி உயிர்களின் பரிணாம தத்துவத்தையும் உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம அதிதியின் ஆசிச்செய்தி

இந்து சமயத்தின் மேன்மையான வேதநெறி தழைத்தோங்க. புனித சில்வெஸ்டர் கல்லூரி இந்து மன்றமும் ஆசிரியர் குழாமும் ஆற்றும் அளப்பரிய பங்களிப்பு பாராட்டுக்குரியது, வாழ்த்துதற்குரியது.

கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையில் கனிஷ்ட பிரிவு இந்து மாணவர் சங்க தலைவராகவும் (1974), சிரேஷ்ட பிரிவு இந்து மாணவர் சங்க செயலாளராகவும் (1980, 1981), கனிஷ்ட பிரிவு தமிழ் இலக்கிய மன்ற செயலாளராகவும் (1973, 1974), சிரேஷ்ட பிரிவ தமிழ் இலக்கிய மன்ற செயலாளராகவும் (1981, 1982), கடமையாற்றியவன் என்ற வகையிலும் புனித சில்வெஸ்டர் கல்லூரி எனக்குத்தந்த பயிறிசியினை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

இக்கல்லூரியின் 75வது வைர விழா வருடத்தில் இக்கல்லூரியின் தமிழ் பிரிவு மாணவர்கள் ஆற்றிய பங்கினை நினைவு கூறி பூரிப்படைகின்றேன். கல்லூரியின் தமிழ் பிரிவினர், பழைய மாணவர்கள் பற்றி கரிசனை கொள்வதில்லை என்பதும் தொடர்புகள் இன்றி இருப்பது பற்றியும் ஆதங்கப்படுகின்றேன். ச்சந்தர்ப்பத்தல் கொளரவமான பழைய மாணவர்களுக்கும் நன்றி பாராட்டுகின்றேன்.

தொடர்ந்தும் இந்து மாணவர் மன்ற செயற்பாடுகள் வெற்றி பெற முப்பெருந்தேவியரின் ஆசி கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்

"மேன்மைக்கொள் சைவ நீதி விளங்குக
உலகெல்லாம்"

திரு. இரா. மகேஸ்வரன்
(பழைய மாணவர் 1968-1982)
நூலகர்- பேராதனை பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் ஆசிச் செய்தி

" அன்பே சிவம் " இதுவே சைவம் கூறும் வேதாந்த வாக்காகும்.

எமது கல்லூரியானது பல்வேறுப்பட்ட சமய கலாசார பாரம்பரியங்களை பேணுகின்ற ஒரு கலைக்கூடம் எனவே சகல சமய விழாக்களும் மிகவும் சிறப்புடனே நடாத்தப்படுகின்றன.

மாணவர்களை ஒழுக்க சீலர்களாகவும் நற்பிரஜைகளாகவும் உருவாக்குவதற்கு சமயம் பெரும் பங்காற்றி வருகின்றது.

எமது கல்லூரியானது 75 வது வருடத்தில் காலடி பதிக்கும் இவ்வேளையில் வாணி விழா கொண்டாடப்படுவது மிகவும் சிறப்பானதாகும். எனவே இவ் வாணி விழா இனிதே நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குகின்றேன்.

திரு. டீ. ஆர். எஸ். மீட்டியாகொட
புனித சில்வெஸ்டர் கல்லூரி
கண்டி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் குழாம்



**Seated:** *V. Muralitharan, V. Ravichandran, U. Chandresegaran, K. Priyanandhi, K. Rajasegeram(Deputy Principal), Mr. T. R. S. Meetiyagoda(Principal), Mr. A. Raja Ranjith(Deputy Principal), K. Jeganathan, R. Devendrakumar*

**Standed:** *S. Sumathi, S. Sarojini, K. Thaiyagaraja, R. Kalaiyarasi, N. Pushparani,G. Kamalini, U. Sriharan, S. Wasanthi, D. Vijayabharathi Y. Rasaiya, G. Parimala, U. Ramanadhan, K. Sumathi*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி விழா 2015
## நிகழ்ச்சி நிரல்

1. வரவேற்பு
2. பூஜை வழிபாடு
3. வரவேற்புரை - கே.டுலக்ஷன் பிள்ளை (இந்த மன்ற தலைவர்)
4. கணனி வரைகலை (எஸ்.அஜித்லிங்கம் , கிருதிகரன்)
5. பிரதி அதிபர் உரை (திருமதி க. இராஜசேகரம்)
6. புஷ்பாஞ்சலி நடனம் - எஸ். மதுஷான்
7. பஜனை (தரம் 6 – 9 சங்கீத மாணவர்கள்)
8. சிறப்பு அதிதி சான்றிதழ் வழங்கல் - உதவி திருமதி. எஸ். வசந்தி
9. சிறப்பு அதிதி உரை
10. தரம் 1-5 மாணவர்களின் நடனம் - தீப நடனம்
11. தரம் 6-9 மாணவர்களின் நாடகம் - பிரகலாதன்
12. அதிபர் சான்றிதழ் வழங்கல் - உதவி திரு. கே. ஜெகநாதன்
13. அதிபர் உரை
14. ஆரம்ப்பிரிவு பஜனை
15. பிரதம அதிதி சான்றிதழ் வழங்கல் - உதவி செல்வி ஆர்.கலையரசி
16. பிரதம அதிதி உரை
17. தரம் 12 மாணவர்களின் வில்லுப்பாட்டு
18. பக்திப்பாடல் - ருக்ஷான்
19. நன்றியுரை - ஆர். ஏ. செந்தூரன் (இந்து மன்ற செயலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மன்ற மாணவர்கள் - 2015



**Seated:** *A. Abishek, T. Madhushan, R. A. Sendhuran, K. Dulakshan, T. Devendran, R. Ganeshraj, G. Midhurshan*

**Standing:** *Manoranjan, Rukshanth, Ravindranath, Priyakanth, Dinushkaran, Dhilip, Srikanth, Dhanushanth, Midhurshan, Ajay aravinth, Hariharan, Thanushkanth, Susanthan, Meshak, Naveen, Vidurshan, Pavithran, Ajithkumar*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விழா போட்டி முடிவுகள்

**பஞ்ச புராணம் ஓதுதல்**

| | | |
|---|---|---|
| தரம் 1 | 1 ம் இடம் | - சர்வேஷ் |
| | 2 ம் இடம் | - கவிஷ்விந் |
| | 3 ம் இடம் | - தஷ்விந் |
| தரம் 2 | 1 ம் இடம் | - லதீஷ் |
| | 2 ம் இடம் | - கிரிஷ்விந்தன் |
| | 3 ம் இடம் | - தாமின் கோஷன் |
| தரம் 3 | 1 ம் இடம் | - ப்ரணேஷ் |
| | 2 ம் இடம் | - திவாகரன் |
| | 3 ம் இடம் | - மதுஷான், ரக்ஷிதன் |
| தரம் 4 | 1 ம் இடம் | - யுகலக்ஷிதன் |
| | 2 ம் இடம் | - லவன் |
| | 3 ம் இடம் | - அஷ்வின் |
| தரம் 5 | 1 ம் இடம் | - அபிஷேக் |
| | 2 ம் இடம் | - இளங்கோவன் |
| தரம் 6 | 1 ம் இடம் | - கிருஷாந்தன் |
| | 2 ம் இடம் | - துஷாந்தன் |
| | 3 ம் இடம் | - சஞ்சய |
| தரம் 7 | 1 ம் இடம் | - ரிதுர்ஷன் |
| | 2 ம் இடம் | - சிந்துஜன் |
| | 3 ம் இடம் | - சதுர்ஷன் சுதிப்குமார் |
| தரம் 8 | 1 ம் இடம் | - தினுஷ்காந் |
| | 2 ம் இடம் | - திவாகர் |
| | 3 ம் இடம் | - கேஷி நிசூதனன், சரண் |
| தரம் 9 | 1 ம் இடம் | - டில்ஷான் |
| | 2 ம் இடம் | - அர்ஜுன் |
| தரம் 10 | 1 ம் இடம் | - வித்தியாசாகர் |
| | 2 ம் இடம் | - அமணன் |
| | 3 ம் இடம் | - ரகுஜன் |
| தரம் 12∴13 | 1 ம் இடம் | - அபிஷேக் |
| | 2 ம் இடம் | - ருக்ஷான் |
| | 3 ம் இடம் | - தனுஷன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேச்சு போட்டி**

| | |
|---|---|
| தரம் 1 | 1 ம் இடம் - பிருந்தாவன் |
| | 2 ம் இடம் - ஷிஹார்ஜிதன் |
| | 3 ம் இடம் - ஹரிபிரியன் |
| தரம் 2 | 1 ம் இடம் - ஹரிகேஷன் |
| | 2 ம் இடம் - சணுஷ்கவின் |
| | 3 ம் இடம் - கிரிதிக் |
| தரம் 3 | 1 ம் இடம் - கீர்திகன் |
| தரம் 4 | 1 ம் இடம் - லக்ஷன் |
| | 2 ம் இடம் - ருக்ஷான் |
| | 3 ம் இடம் - செந்தூரன் |
| தரம் 5 | 1 ம் இடம் - ஶ்ரீமன் |
| | 2 ம் இடம் - கோணேஸ்வரன் |
| | 3 ம் இடம் - பவித்திரன் |
| தரம் 6 | 1 ம் இடம் - அகிலத் திவாகர் |
| | 2 ம் இடம் - கபிலேஷ் |
| | 3 ம் இடம் - ருசாந்தன் |
| தரம் 7 | 1 ம் இடம் - சதுஷன் |
| | 2 ம் இடம் - அபிராம் |
| | 3 ம் இடம் - தசிகரன் |
| தரம் 8 | 1 ம் இடம் - ஷவீன் |
| | 2 ம் இடம் - டிலுக்ஷான் |
| | 3 ம் இடம் - கனுஷ்கர் |
| தரம் 9 | 1 ம் இடம் - யுகேஷ் |
| | 2 ம் இடம் - பிரணீத் |
| | 3 ம் இடம் - டில்ருக்ஷான் |
| தரம் 10 | 1 ம் இடம் - தக்ஷிகான் |
| | 2 ம் இடம் - கோகுலவரதன் |
| | 3 ம் இடம் - ரிதுர்ஷன் |
| தரம் 12∴13 | 1 ம் இடம் - பிரியகாந் |
| | 2 ம் இடம் - அஜய் அரவிந் |
| | 3 ம் இடம் - தேவேந்திரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோலப் போட்டி

| | | |
|---|---|---|
| தரம் 1 | 1 ம் இடம் | சயோன் |
| | 2 ம் இடம் | சாருகேஷன் |
| | 3 ம் இடம் | ஹரிஷான் |
| தரம் 2 | 1 ம் இடம் | தவிஷன் |
| | 2 ம் இடம் | நிவேஷ்கர் |
| | 3 ம் இடம் | ப்ரணவன், கிர்திக் |
| தரம் 3 | 1 ம் இடம் | ஜினேஷ்கர் |
| | 2 ம் இடம் | கிதுர்ஷன் |
| | 3 ம் இடம் | சுகீர்த்தன் |
| தரம் 4 | 1 ம் இடம் | பிரேந்திரநாத் |
| | 2 ம் இடம் | விஜோத் |
| | 3 ம் இடம் | ஹரி பிரதாப் |
| தரம் 5 | 1 ம் இடம் | சதுர்ஷன் |
| | 2 ம் இடம் | சபேஷ் |
| | 3 ம் இடம் | ருத்ரவானன், விஷ்வஜித் |
| தரம் 6 | 1 ம் இடம் | சச்சின் |
| | 2 ம் இடம் | சமிலன் |
| | 3 ம் இடம் | கபில்ராஜ் |
| தரம் 7 | 1 ம் இடம் | ஷரன் |
| | 2 ம் இடம் | துர்ஷான் |
| | 3 ம் இடம் | உதேஷன் |
| தரம் 8 | 1 ம் இடம் | ரிஷி |
| | 2 ம் இடம் | நவலோஷன் |
| | 3 ம் இடம் | டிலுக்ஷான் |
| தரம் 9 | 1 ம் இடம் | கவின்ராஜ் |
| | 2 ம் இடம் | கரன் |
| | 3 ம் இடம் | ப்ரஷாந்த், தர்ஷான் |
| தரம் 10 | 1 ம் இடம் | மதுஷான் |
| | 2 ம் இடம் | மிதுஷன் |
| | 3 ம் இடம் | பிரஷாந், கிரிஷாந் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

◆ பிரதம அதிதியாக பெருமனதுடன் எமது அழைப்பை ஏற்று வருகை தந்த எமது கல்லூரியின் பழைய மாணவனும் பேராதனை பல்கலைக்கழக சிரேஸ்ட நூலகருமாகிய திரு.ர. மகேஸ்வரனுக்கும்

◆ சிறப்பு அதிதியாக சிறப்பித்த கண்டி வலய இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி குமுதினி இரவீந்திரனுக்கும்

◆ இந்து மன்றம் சிறப்புடன் நடாத்தும் வாணி விழாவிற்கு நிறைந்த மனதுடன் அனுமதியும் உதவியும் வழங்கிய கல்லூரி அதிபருக்கும்

◆ அயராது பாடுபட்ட ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும்

◆ எமக்கு என்றுமே ஒத்துழைப்பும் உதவியும் வழங்கும் எமது அன்பு பெற்றோர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும்

◆ எமக்கு இதழை உரிய நேரத்தில் பெற்றுத்தந்த Bhagya Printers, Kandy. (0812226877) நிறுவனத்திற்கும்

◆ மற்றும் பல வகைகளில் உதவி வழங்கிய நல் உள்ளம் படைத்த அனைவருக்கும் நன்றிகள் பல கோடி

" நன்றி மறப்பது நன்றன்று – நன்றல்லது
அன்றே மறப்பது நன்று "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ESWARAN'S BOOK DEPOT

**Wholesale, Retail**
**Dealers in all kind of Books**








**No. 126/1, Colombo Street, Kandy.**
**Tel/Fax : 0812-220820**
**Email : eswarancybervila@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org